செ. கு. எண்:209 நாள் :12.11.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின் அறிக்கை – 12.11.2014

ஈரோடு மாவட்டம், **பவானிசாகர் அணையிலிருந்து** அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களின் இரண்டாம்போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு விவசாய பெருங்குடி மக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, ஈரோடு மாவட்டத்திலுள்ள, பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களின் இரண்டாம்போக பாசனத்திற்கு **13.11.2014 முதல்** தண்ணீர் திறந்துவிட ஆணையிடப்படுகிறது.

இதனால், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் மற்றும் பவானி வட்டங்களிலுள்ள **24,504 ஏக்கர்** நிலங்கள் பயன்பெறும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9